**செய்தி வெளியீடு எண் 183** **நாள்: 03.04.2017**

## திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் ரூ. 9 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

~~~~~

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.04.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பொது மக்களின் கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பெற்றுக் கொண்டார். மேலும் இக்கூட்டத்திற்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை புரிந்த பொதுமக்கள் தங்களது தனிப்பட்ட குறைகளை நிவர்த்தி செய்யவும், உதவிகள் வழங்கிடவும் கோரி மனுக்களை அளித்தனர். இதில் நிலம் சம்பந்தமாக 52 மனுக்களும், சமூக பாதுகாப்பு திட்டம் 52 மனுக்களும், சமூக நலத்திட்டம் 6 மனுக்களும், குடும்ப அட்டை 4 மனுவும், ஆதிதிராவிடர் / பிற்படுத்தப்பட்டோர் நலம் 2 மனுவும், வேலைவாய்ப்பு 24 மனுக்களும், சட்டம் மற்றும் ஒழுங்கு 6 மனுக்களும், ஊரக / நகர்புற வளர்ச்சி 25 மனுக்களும், கடனுதவி 2 மனுக்களும், அடிப்படை வசதி / போக்குவரத்து / சுகாதாரம் 6 மனுக்களும், வேளாண்மை / கால்நடைத்துறை / மீன்வளம் 10 மனுக்களும், இதரதுறை 53 மனுக்களும், பேரிடர் 13 மனுக்களும், சான்றிதழ் 16 மனுக்களும், சான்றிதழ் நகல்கள் 3 மனுக்களும், கல்வி 1 மனுவும், உழவர் பாதுகாப்பு திட்டம் 1 மனுவும் என மொத்தம் 342 மனுக்கள் பெறப்பட்டது.

இம்மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ளவும், பயனாளிகளுக்கு உதவிடும் வகையில் விரைந்து பரிசீலிக்க வேண்டும் என துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தாட்கோ மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் மூலம் 1 நபருக்கு மானியத்துடன் கூடிய நான்கு சக்கர வாகனக்கடனாக ரூ. 9 இலட்சத்தி 50 ஆயிரத்திற்கான காசோலையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) (பொ.) திரு. வி.முத்துசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~